# பத்திரிக்கை செய்தி

## வக்கீல் அவர்களிடம் இருந்து சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய பரிந்துரைப்பதற்காக ரூ.6000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பொள்ளாச்சி நகராட்சி வருவாய் அலுவலர்/வரி வசூலர் கைது.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி தாலுகா ஜமீன்ஊத்துக்குளியைச் சேர்ந்த வழக்குரைஞர் செல்வி.நசிமா என்பவர் கடந்த 12.05.2023-ம் தேதி பொள்ளாச்சியை சேர்ந்த திரு.நாகராஜ் என்பரிடமிருந்து பொள்ளாச்சி டவுன் ஜோதிநகரில் அமைந்துள்ள 771 சதுரடி அளவுள்ள வீட்டினை ரூ.3,50,000/-த்திற்கு தனது பெயரில் வாங்கி அதை பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். அதன் பின்னர் கடந்த 15.02.2024-ம் தேதி மேற்படி சொத்துவரியை தனது பெயரில் மாற்றம் செய்வதற்காக கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தில் அமைந்துள்ள தகவல் மையத்திற்கு சென்று அன்றைய தினமே சொத்துவரி நிலுவை தொகையான ரூ.56/-, கொடிநாள் நிதியாக ரூ.100/- மற்றும் சொத்துவரி பெயர் மாற்ற கட்டணமாக ரூ.500/- ஆகியவற்றை செலுத்தி அதற்கான ரசீதுகளை பெற்றுக்கொண்டுள்ளார். பின்னர் கடந்த 23.03.2024-ம் தேதி சுமார் 12.00 மணியளவில் விண்ணப்பம் சம்மந்தமாக பொள்ளாச்சி நகராட்சியின் வரிவசூலர் திரு.யோகேந்திரன் என்பவர் தன்னை செல்போனில் தொடர்பு கொண்டு மேற்படி சொத்தினை கள ஆய்வு மேற்கொள்ள வந்திருப்பதாகவும், அதனை வந்து அடையாளம் காண்பிக்கும்படியும் தெரிவித்ததின் பேரில் தான் வேலையாக இருந்ததால் தன்னுடன் பணிபுரியும் தனது நண்பரான திரு.பிரசாத்குமார் என்பவருக்கு தகவல் தெரிவித்து மேற்படி சொத்தை அடையாளம் காண்பிக்க அனுப்பியுள்ளார். வரிவசூலர் திரு.யோகேந்திரன் கள ஆய்வு முடித்த பின் வாதியின் விண்ணப்பித்தினை பரிந்துரை செய்வதற்கு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் தவிர அவருக்கு தனியாக பணம் லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று வாதியின் நண்பரான திரு.பிரசாத்குமாரிடம் தெரிவித்துள்ளார். அதற்கு திரு.பிரசாத்குமார், பணம் பற்றி வாதியிடம் பேசிக் கொள்ளுமாறு வரிவசூலரிடம் தெரிவித்துள்ளார். அதன்படி 23.03.2024-ம் தேதி இரவு வரிவசூலர் திரு.யோகேந்திரன் வாதியை தொடர்பு கொண்டு கள ஆய்வு முடித்துவிட்டதாகவும், விண்ணப்பத்தினை பரிந்துரைக்க ரூ.6,000/-ம் அவருக்கு தனியாக லஞ்சமாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு வாதியானவர் அவ்வளவு பணம் ஏன் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்கு நீங்கள் வக்கீல் தானே, உங்களுக்கு எங்கள் ஆபீஸ் பார்மால்ட்டீஷ் தெரியாதா என்று சொல்லி, WhatsApp call-ல் பேசுவதாக சொல்லி போனை கட்செய்துள்ளார். அதன் பிறகு வரிவசூலர் திரு.யோகேந்திரன், வாதியை தொடர்ந்து Whats app call-ல் பலமுறை அழைத்துள்ளார் ஆனால் வாதி போனை எடுக்காமல் சமாளித்துள்ளார். அதன் பின்னர் கடந்த ஏப்ரல் மாதத்தில் தனது விண்ணப்பத்தின் நிலை குறித்து வாதியானவர்

ஆன்லைனில் பார்த்த போது, மேற்படி சொத்தானது பெயர் மாற்றம் செய்யாமல் இருந்ததால் வாதி கடந்த 30.04.2024-ம் தேதி வருவாய் ஆய்வாளர் திரு.கொங்குராசு அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டு கேட்ட போது, வாதியை லைனிலேயே இருங்கள் என்று சொல்லிவிட்டு போனை திரு.யோகேந்திரனிடம் கொடுப்பதாக சொல்லி கொடுத்துள்ளார். அப்போது திரு.யோகேந்திரன் வாதியிடம், நான் ஏற்கனவே பார்மால்ட்டீசை உங்களிடம் சொல்லிட்டேனே மேடம் நேரில் வாங்க பேசிக்கலாம் என்று சொல்லியுள்ளார். அதன் பின்னர் 04.05.2024-ம் தேதியன்று வரிவசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை வாதி செல்போனில் தொடர்பு கொண்டு தனது விண்ணப்பம் நிலை குறித்து கேட்டபோது, அன்று விடுமுறை என்று சொல்லிவிட்டு 06.05.2024-ம் தேதியன்று காலை தன்னை நேரில் வந்து அலுவலகத்தில் பார்க்குமாறு தெரிவித்துள்ளார். வாதி அன்றையதினம், என்னுடன் பணிபுரிந்துவரும் திரு.பிரசாத்குமார் என்பவர் வருவார் என்ற விபரத்தை தெரிவிக்க சுமார் 11.00 மணியளவில் வரிவசூலர் திரு.யோகேந்திரன் அவர்களை எனது செல்போனியில் தொடர்பு கொண்டு தெரிவித்தற்கு சரி வரச்சொல்லுங்கள் என்றும் தன்னை பார்க்க வரும் பொழுது UGD-க்கு ரூ.2,000/-த்தை செலுத்திவிட்டு அதன் ரசீது மற்றும் அவர் ஏற்கனவே கேட்டிருந்த ரூ.6,000/-த்தையும் கொண்டு வருமாறு தெரிவித்துள்ளார். பின்னர் வாதியின் நண்பர் திரு.பிரசாத்குமார் பொள்ளச்சி நகராட்சி வரிவசூலர் திரு.யோகேந்திரனை சந்தித்து விண்ணப்பம் குறித்து கேட்டபோது, திரு.பிரசாத்குமாரிடம் வரிவசூலர் தான் மேடத்திடம் கேட்ட லஞ்சப் பணத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டுள்ளார். அதற்கு திரு.பிரசாத்குமார் பணம் குறித்து மேடம் எதுவும் சொல்லவில்லை என்று சொல்லியுள்ளார். அதற்கு வரிவசூலர் திரு.யோகேந்திரன் ரூ.6,000/-ம் பணத்துடன் வந்தால் தான் விண்ணப்பத்தை பரிந்துரை செய்து கொடுப்பேன் என்று கறாராக சொல்லி அனுப்பியுள்ளார். அதன்பின்னர் கடந்த 20.05.2024-ம் தேதி மாலை வரிவசூலர் திரு.யோகேந்திரன் அவர்கள் வாதியை செல்போனில் அழைத்து இன்று 21.05.2024-ம் தேதி காலை UGD-க்கு பணம் செலுத்திய ரசீது மற்றும் லஞ்சப் பணம் ரூ.6,000/- த்துடன் வந்து பார்க்குமாறு தெரிவித்துள்ளார். சொத்து பெயர் மாற்றம் செய்வதற்கு பரிந்துரைக்க லஞ்சமாக பொள்ளாச்சி நகராட்சி வரிவசூலர் திரு.யோகேந்திரன் அவர்களுக்கு ரூ.6,000/- கொடுக்க வாதி விரும்பாமல் லஞ்ச ஒழிப்புத்துறை, கோயமுத்தூர் பிரிவிக்கு நேரில் சென்று புகார் மனு கொடுத்துள்ளார். வாதி அளித்த புகாரின் பேரில் லஞ்ச ஒழிப்புத்துறை வழக்கு பதிவு செய்து லஞ்சப் பணம் ரூ.6000/- வாதியிடம் இருந்து சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய பரிந்துரைப்பதற்காக கேட்டு வாங்கிய வரிவசூலர் திரு.யோகேந்திரனை பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கைது செய்யப்பட்டார்.